MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 27.04.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 240 | **பொருள் எண்.1**<br><br>மேலூர் நகராட்சியில் 2016–17ம் ஆண்டு முதல் CWBS Centralized Webbased Software Online இணையதளம் மூலம் வரவு செலவு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வரப்படுகிறது. மேற்படி காலத்தில் ஆண்டுக்கணக்குகள் முடிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் ஆண்டுக் கணக்கினை முடித்து தணிக்கைக்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் கருதி தனியார் நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும், தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. 2016–17ல் உள்ள நடைமுறைப்படி 2017–18ம் ஆண்டிற்கு மேற்படி நிறுவனம் மூலம் ஆண்டுக்கணக்கு முடித்து கொடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1) 2016–17ம் ஆண்டிற்கு வருவாய் நிதி, குடிநீர் வடிகால் நிதி, கல்வி நிதி போன்ற நிதிகளுக்கு ஆண்டுக்கணக்கு ஆன்லைனில் முடித்து கொடுக்க ரூ.56000/– செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 2017–18ம் ஆண்டிற்கு ரூ.56000/–செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 241 | **பொருள் எண்.2**<br><br>மேலூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டுகளில் எல்லைகளை மறுவரையறை செய்யப்பட்டதற்கான வரைவு பட்டியல் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 29.12.2017 அன்று வெளியிடப்பட்டது. மறுவரையறை பட்டியலினை பொமுக்கள் பார்வையிட்டு கருத்துக்கள் மற்றும் | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
ஆட்சேபனைகள்29.12.2017 முதல் 12.01.2018 வரை பெறப்பட்ட ஆட்சேபனைகள் அடிப்படையில் நகர் வரைபடம் மற்றும் 27 வார்டுகள் வரைபடம் படிவம் ID, IID, IVD, மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்பம் செய்யப்பட்டு 15 நகல்கள் தயார் செய்து 06.02.2018 மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் வார்டு மறுவரைஆணையக் குழுவிடம் சமர்ப்பித்து மறுபடியும் ஆட்சேபனை எதுவும் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் 28.02.2018ம் தேதி ஒப்புதல் பெறப்பட்டு மறுவரையறை ஆணையர் தமிழ்நாடு அரும்பாக்கம் சென்னை அவர்களிடம் ஒப்படைக்கவும், மேற்படி கருத்துருக்கள் சமர்ப்பிக்க Booklet தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து கொடுக்க வரப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைபுள்ளி விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>சுவாமி பில்டர்ஸ்</td><td>ரூ.34425</td></tr>
<tr><td>2.</td><td>பில்டிங் காண்ட்ரக்டர் & பிளானிங்</td><td>ரூ.36150</td></tr>
<tr><td>3.</td><td>சன் பில்டர்ஸ்</td><td>ரூ.29250</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்த சன்பில்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.29250/– தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1325/2017/எப்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>242</td>
<td>
பொருள் எண்.3<br>
இந்நகராட்சியின் அனைத்து பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகைக்கு 1984–1985 முதல் 2015–2016 வரை 32 ஆண்டுகளுக்கும், 5வது ஊதியக்குழ நிலுவைத்தொகை 1989–1990 முதல் 2015–2016 வரை 27 ஆண்டுகளுக்கும், 6வது ஊதியக்குழு தொகை 1998–1999 முதல் 2002–03 வரை 5 ஆண்டுகளுக்கும் வட்டி கணக்கீட்டு செய்ய கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | (continued) | |

| | |
|---|---|
| 1) Sanjey Solutions,<br>14, HAVR line,<br>South colony,<br>Komarapalayam. | ரூ.152000/— |
| 2) M.Ramkumar<br>Ram Solutions,<br>55/15th East street<br>Kamaraj nagar,<br>Thiruvanmiyur,<br>Chennai. | ரூ.174400/— |
| 3) OZONE Technologies<br>Executive Business Development<br>15, Lake view road,<br>Kottur, Chennai. | ரூ.181000/— |

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்த Komarapalayam Sanjey Solutions, நிறுவனத்தின் மூலம் மேற்கண்ட பணிகளை செய்ய பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.340/2018/இ1

| | | |
|---|---|---|
| 243 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட திருவாதவூர் சாலை மில்கேட் பகுதியில் உள்ள மேலுருஞ்சி கண்மாயிலிருந்து நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் MS குழாய் சேதமடைந்துள்ளதை அகற்றிவிட்டு புதிதாக PVC கேசிஸ் பைப் பொருத்துமப்ணி ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு<br>அ) பொது மக்களின் நலன்கருதி மேற்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டப்பிரிவு எண்.15ன் கீழ் செலவுகளை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) குடிநீர் விநியோகத்தின் அவசியம கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி.ன் ஒப்பந்ததாரர் திருமதி.கே.பதுருனிஷா என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(அ), (ஆ), (இ), மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.285/2018/இ1)</td><td></td></tr>
<tr><td>244</td><td>பொருள் எண்.5<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்ட மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு நீண்ட காலமாகிவிட்டதால் ஒரு சில மின்மோட்டார்கள் மிகவும் பழுதடைந்து பழுதுநீக்கி மீண்டும் பொருத்த முடியாத நிலையில் உள்ளதாலும், கோடைகாலம் துவங்கியுள்ளதால், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக விநியோகம் செய்ய கீழ்க்கண்ட விபரப்படியான மின்மோட்டார்கள் வாங்கவும், அதற்கான செலவினம் ரூ.4.00இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1) 1HP Single phase Motor - 150 Mts Head 1 Nos<br>2) 1.5HP Single phase Motor - 150 Mts Head 1 Nos<br>3) 3 HP 3 phase Motor - 150 Mts Head 2 Nos<br>4) 5 HP 3 phase Motor - 4 ½ size 150 Mts Head 2 Nos<br>5) 5 HP 3 phase Motor - 6 ½ size 150 Mts Head 2 Nos<br>6) Round Boad single Phase ½ HP (LT.LK) 1 Nos<br>7) 5HP Rannel Boad (LT.LK) 1 Nos<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட விபரப்படியான மோட்டார்களை வாங்கவும் அதற்கான செலவினத் தொகை ரூ.4.00இலட்சத்தையும், பொதுமக்களின் நலன் கருதி நகராட்சியின் சட்டப்பிரிவு எண்.15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஆ) மேற்கண்ட விபரப்படி மோட்டார்களை பொது மக்கள் நலன் கருதி, கோடைகாலத்தில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் எவ்வித தடையும் இன்றி விநியோகம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கோரி மின்மோட்டார் பெறப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 245 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சியில் 2017–2018ஆம் ஆண்டில் நடைபெறும் திட்டப்பணிகளை குறித்து தினத்தந்தி நாளிதழிலில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.9639/– ஐ மேலாளர், தினத்தந்தி நாளிதழ் மதுரைக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.340/2018/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 246 | **பொருள் எண்.7**<br><br>மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சியின் குடிநீர் விநியோக முறைபாடு மண்டல வாரியாக குடிநீர் மேல்நிலைத் தொட்டி குறியீடு செய்து ஆட்டோகேடில் வரைந்து A0 அளவில் வண்ணபிரதிகளாக 27 வார்டுகளுக்கும் தயார் செய்ய ரூ.12731/– மட்டும் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிகளுக்காக ரூ.12731/–ஐ செலவுகளை மேற்கொண்ட திரு.ஆ.பிரேம்குமார் மின் கம்பியாளருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.595/2018/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 247 | **பொருள் எண்.8**<br><br>இந்நகராட்சி பகுதியில் அமைந்து கீழ்க்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேலாகி விட்டதால், கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் நிலையில் உள்ளதால், பொதுமக்கள் நலன்கருதி கட்டிடங்கள் முற்றிலுமாக இடித்து தரைமட்டமாக்க மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1) தினசரி மார்க்கெட் உள்ளே அமைந்துள்ள கிட்டங்கி கட்டிடம்<br>2) தினசரி மார்க்கெட் செல்லும் வழியில் இருபுறமும் அமைந்துள்ள கழிப்பறைகள்<br>3) திருச்சி மெயின் சாலையில் அமைந்துள்ள நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் அமைந்துள்ள கழிப்பறை<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மதுரை மண்டல நகராட்சி செயற்பொறியாளரின் அனுமதி பெற்று மேற்கண்ட கட்டிடங்களை முற்றிலும் இடித்து தரைமட்டமாக்கவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.811/2018/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 248 | **பொருள் எண்.9**<br><br>குப்பைக்கிடங்கில் குப்பைகள் கொட்டுவதற்கு இடம் இல்லாத காரணத்தால் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குப்பைகளை ஜே.சி.பி.இயந்திரம் மூலம் ஒதுக்கி குப்பைகளை கொட்டுவதற்கு இடவசதி செய்துதர ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.704/2018/எச்1 | அனுமதிக்கப்பட்டது |

249

## பொருள் எண்.10

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு சாலைவரி மற்றும் பசுமை வரி 2018–19ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண் | வாகனத்தின் எண் | சாலைவரி |
|---|---|---|
| 1. | TN59 M 4864 | 5700 |
| 2. | TN59 W 5185 | 220 |
| 3. | TN59 W 5186 | 800 |
| 4. | TN59 BZ 9453 | 440 |
| 5. | TN59 BZ 9457 | 440 |
| 6. | TN59 J 1338 | 3000 |
| 7. | TN59 BX 1362 | 7144 |
| 8. | TN59 AZ 3449 | 9830 |
| 9. | TN59 BX 1344 | 7144 |
| | மொத்தம் | 34718 |
| | பசுமைவரி | 6610 |
| | சேவைவரி | 500 |
| | | 41828 |

மேற்கண்ட தொகையினை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.603/2009/எச்1)

அனுமதிக்கப்பட்டது